பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

16 05 2025 **FRIDAY** **12.40 PM**

ஆகாஷ்வாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- பாகிஸ்தானுக்கு எதிரான ராணுவ நடவடிக்கைகளில் புஜ் விமானப்படை தளம் முக்கிய பங்கு வகிப்பதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.
- ஆபரேஷன் சிந்தூர் வெற்றியை கொண்டாடும் வகையில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மூவர்ண கொடி பேரணி நடைபெற்று வருகிறது.
- இந்தியா - இங்கிலாந்து இடையிலான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் காரணமாக இருதரப்பு வர்த்தகம் ஆண்டுக்கு 15 சதவீதம் அளவிற்கு அதிகரிக்கும் என ஆய்வறிக்கை தெரிவிக்கிறது.
- தமிழகத்தில் 10 மற்றும் 11ஆம் வகுப்பு பொதுத் தேர்வு முடிவுகள் இன்று வெளியிடப்பட்டன.
- 19 வயதுக்கு உட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்து போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று மாலத்தீவை எதிர்கொள்கிறது.

<u>*---- இனி விரிவான செய்திகள் --*</u>

**<<<<<<>>>>>>**

பாகிஸ்தானுக்கு எதிரான ராணுவ நடவடிக்கைகளில் புஜ் விமானப்படை தளம் முக்கிய பங்கு வகிப்பதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

இன்று, குஜராத் மாநிலத்தில் உள்ள புஜ் விமானப் படைத்தளத்திற்கு சென்ற அவர், ராணுவ வீரர்களுடன் கலந்துரையாடினார்.

அப்போது பேசிய திரு ராஜ்நாத் சிங், 1965-ஆம் ஆண்டு நடைபெற்ற பாகிஸ்தான் போரின்போது இந்திய படைகளின் வெற்றிக்கு புஜ் விமானப்படை தளம் உறுதுணையாக இருந்தது என்றார்.

இதேபோன்று, ஆபரேஷன் சிந்தூர் வெற்றியிலும் புஜ் விமானப்படை தளத்தின் பங்களிப்பு பெருமிதம் அளிப்பதாக அவர் கூறினார்.

இந்த படைத்தளத்தில் இருந்து புறப்பட்டு சென்ற நமது விமானங்கள் 23 நிமிடங்களில் பாகிஸ்தானில் உள்ள தீவிரவாத முகாம்களை தாக்கி அழித்ததாகவும் அவர் தெரிவித்தார்.

ராணுவ வீரர்கள் மிகுந்த உற்சாகத்துடன் பணியாற்றுவதாக குறிப்பிட்ட திரு ராஜ்நாத் சிங், இந்தியாவின் எல்லைகள் பாதுகாப்பாக உள்ளது என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

**<<<<<<>>>>>>**

நேபாள – திபெத் எல்லையில் உள்ள **Makalu** மலை சிகரத்தில் ஏறி சாதனை படைத்த இந்தோ – திபெத்திய காவல்படையினருக்கு மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இமயமலையின் சிகரங்களில் ஒன்றான **Makalu** –வில் ஏறி மலை உச்சியில் இந்தியாவின் மூவர்ண கொடியை பறக்கவிட்ட இந்த படையினர் தூய்மை இந்தியா இயக்கத்தால் ஈர்க்கப்பட்டு, அந்த மலையில் தேங்கிக்கிடந்த சுமார் 150 கிலோ குப்பைகளையும் அகற்றியிருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த குழுவில் இடம்பெற்ற வீரர்களின் துணிச்சல் மற்றும் மன உறுதிப்பாட்டை பாராட்டுவதாகவும் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

ஆபரேஷன் சிந்தூர் வெற்றியை கொண்டாடும் வகையில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மூவர்ண கொடி பேரணி நடைபெற்று வருகிறது.

இந்த நடவடிக்கையில் பங்கேற்ற பாதுகாப்புப்படையினரை பாராட்டும் விதமாக கர்நாடக மாநிலம் ஹுப்பள்ளியில் இன்று நடைபெற்ற மூவர்ண கொடி பேரணியை, மத்திய அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி தொடங்கிவைத்தார்.

இதில் ஏராளமானோர் பங்கேற்று, ராணுவத்தின் செயல்பாடுகளுக்கு ஆதரவாக முழக்கங்களை எழுப்பினர்.

ஒடிஷா மாநிலம் சம்பல்பூரில் நடைபெற்ற பேரணியில் மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான், அம்மாநில துணை முதலமைச்சர் திரு கே வி சிங் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

கேரள மாநிலம் திருச்சூரில் மூவர்ண கொடி பேரணியை மத்திய இணையமைச்சர் திரு சுரேஷ் கோபி தொடங்கிவைத்தார்.

இதில் ஏராளமான மக்கள் மூவர்ண கொடி மற்றும் பலூன்களை ஏந்தியவாறு பங்கேற்றனர்.

நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் திரு சுரேஷ் கோபி, ஆபரேஷன் சிந்தூர் மூலம் தீவிரவாதத்துக்கு எதிராக கடுமையான எச்சரிக்கை விடப்பட்டுள்ளது என்றார்.

<<<<<<>>>>>>

இந்தியா - இங்கிலாந்து இடையிலான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் காரணமாக இருதரப்பு வர்த்தகம் ஆண்டுக்கு 15 சதவீதம் அளவிற்கு அதிகரிக்கும் என ஆய்வறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் இறுதி செய்யப்பட்ட இந்த தடையற்ற வர்த்தக ஒப்பந்தம், இந்திய நிறுவனங்கள் இங்கிலாந்து சந்தையில் தடம் பதிக்க வாய்ப்பை ஏற்படுத்தியிருப்பதுடன், உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவித்து, பொருளாதார வளர்ச்சிக்கு கூடுதல் பங்களிப்பை வழங்கும் என்றும் அந்த ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**<<<<<<>>>>>>**

உலகின் வேகமாக வளரும் பொருளாதாரமாக இந்தியா திகழ்கிறது என்று ஐ நா ஆய்வறிக்கை தெரிவிக்கிறது.

உலக பொருளாதார சூழல் குறித்த அரையாண்டு அறிக்கையை வெளியிட்டு பேசிய ஐ நா-வின் முதுநிலை பொருளாதார நிபுணர் திரு **Ingo Pitterle,** உலகளாவிய பொருளாதாரம் நெருக்கடியான சூழலில் இருந்தாலும், இந்திய பொருளாதார வளர்ச்சி நடப்பாண்டில் ஆறு புள்ளி மூன்று சதவீதமாக இருக்கக்கூடும் என்று குறிப்பிட்டுள்ளார்.

அரசு முதலீடு மற்றும் தனிநபர் நுகர்வு அதிகரித்ததே இந்திய பொருளாதார வளர்ச்சிக்கு காரணம் என்றும் அவர் கூறியுள்ளார்.

அடுத்த ஆண்டு நாட்டின் பொருளாதார வளர்ச்சி சற்று அதிகரித்து ஆறு புள்ளி நான்கு சதவீதத்தை எட்டக்கூடும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

**<<<<<<>>>>>>**

தேசிய டெங்கு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி, டெங்கு காய்ச்சல் தடுப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதனால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து மக்களிடம் எடுத்துக்கூறி, நோய் பாதிப்பு தொற்றாமல் இருப்பதற்கு தேவையான முன்னெச்சரிக்கை மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**<<<<<<>>>>>>**

சிக்கிம் மாநிலம் உருவான தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி, குடியரசுத்தலைவர், பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் அம்மாநில மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், இயற்கை எழிலும், கலாச்சார செழுமையும் மிகுந்த சிக்கிம் மாநில மக்களின் உபசரிப்பு போற்றத்தக்கது என தெரிவித்துள்ளார்.

நீடித்த வளர்ச்சிக்கு சிறந்த உதாரணமாக திகழும் சிக்கிம், இயற்கையுடன் இணக்கமாக உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், இயற்கை விவசாயம், கல்வி மற்றும் உள்ளாட்சி நிர்வாகத்தில் சிறந்து விளங்கும் சிக்கிம், புதுமை முயற்சிகளிலும் முன்னோடியாக திகழ்கிறது என்று பாராட்டு தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், பல்வேறு துறைகளிலும் சிக்கிம் மாநிலம் சிறந்து விளங்குவதாக குறிப்பிட்டுள்ளார்.

அம்மாநிலம் உருவாகி 50 ஆண்டுகள் நிறைவடையும் இந்நாளில், மக்கள் வளம் பெற வாழ்த்துவதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

மக்களவைத் தலைவர் திரு. ஓம்.பிர்லா உள்ளிட்ட தலைவர்களும் சிக்கிம் மாநில மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் 10 மற்றும் 11ஆம் வகுப்பு பொதுத் தேர்வு முடிவுகள் இன்று வெளியிடப்பட்டுள்ளன.

10-ஆம் வகுப்பில் 93 புள்ளி 8 சதவீத மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

11-ஆம் வகுப்பில் 92 புள்ளி பூஜ்ஜியம் ஒன்பது சதவீத மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

இத்தேர்வுகளில் வெற்றிபெற்றுள்ள மாணவ, மாணவியருக்கு வாழ்த்து தெரிவித்துள்ள முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின், பத்தாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றவர்கள் கல்லூரி படிப்புக்கு தேவையான பாடப்பிரிவுகளை தேர்ந்தெடுத்து படிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

தேர்வில் தேர்ச்சி பெற முடியாதவர்கள் மனம் தளராமல் அடுத்தடுத்த தேர்வுகளில் தேர்ச்சி பெற்று முன்னேறுமாறும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, மாநில அரசு செயல்படுத்திவரும் திட்டங்கள் காரணமாக, 12-ஆம் வகுப்பு பொத்தேர்வில் ஷெட்யூல்டு மற்றும் பழங்குடியினர் மாணவர்களின் தேர்ச்சி கடந்த 60 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு 96 சதவீதத்தை அடைந்துள்ளதாக முதலமைச்சர் தமது சமூக வலைதள பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தின் ஈரோடு, கிருஷ்ணகிரி உள்ளிட்ட ஏழு மாவட்டங்களில் இன்று மழை பெய்யக்கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ள நிலையில், பல்வேறு மாவட்டங்களில் நேற்றிரவில் இருந்தே கனமழை பெய்து வருகிறது.

தூத்துக்குடி மாவட்டத்தில் சூறாவளி காற்றுடன் பெய்த மழையால், நாரைக்கிணறு கிராமத்தில் மின்கம்பங்களும், மரங்களும் முறிந்து விழுந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>>

ரஷ்யா – யுக்ரைன் இடையே துருக்கியில் நடைபெறும் பேச்சுவார்த்தையில் இருநாட்டு அதிபர்களும் கலந்துகொள்ள போவதில்லை என்று அறிவித்துள்ளனர்.

இஸ்தான்புல்லில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையில் தாம் கலந்துகொள்ள போவதில்லை என்று ரஷ்ய அதிபர் திரு விளாடிமீர் புட்டின் ஏற்கனவே அறிவித்த நிலையில், யுக்ரைன் அதிபர் திரு ஜெலன்ஸ்கியும் இதில் பங்கேற்க போவதில்லை என்று கூறியுள்ளார்.

தமக்கு பதிலாக பாதுகாப்பு அமைச்சர் திரு **‘Rusteem Umerov ’** கலந்துகொள்வார் என்று திரு ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

19 வயதுக்கு உட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்து போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று மாலத்தீவை எதிர்கொள்கிறது.

அருணாச்சலப்பிரதேசத்தில் இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

<<<<<<>>>>>>

போர்ச்சுக்கலில் நடைபெற்றுவரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் விஜய் சுந்தர் பிரசாந்த் - ஸ்பெயினின் **Sergio Martos** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 2-6, 6-3, 10-5 என்ற செட் கணக்கில், ஸ்வீடனின் **Erik Grevelius – Adam Heinonen** இணையை வென்றது.

<<<<<<>>>>>>